Registered as a news paper.

பக்கங்கள் : எட்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 வைகாசி 15 ஹிஜ்ரி 1427 ற.ஆகிர் 30 (29.05.2006) திங்கட்கிழமை இதழ் 240

# தாயகத்தின் உரிமைக்குரலை வலியுறுத்தி 12 நாடுகளில் இன்று எழுச்சி நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம் —

தமிழர் தாயகத்தின் உரிமைக் குரலை வலியுறுத்தி அனைத்து புலம்பெயர் வாழ்நாடுகளிலும் உரிமைக் குரலுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

இங்கிலாந்து, கனடா, இத்தாலி, பின்லாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, சுவீடன், சுவிஸ், நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே மற்றும் ஜேர்மனி ஆகிய 12 நாடுகளில் இந்த உரிமை முழக்கப் போராட்டம் நடைபெறவுள்ளது.

தமிழீழ மக்களின் தேசியம், தாயகம், சுய நிர்ணயம், அங்கீகரிக்கப்பட வேண்டும்.

தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை தடை விதித்த நாடுகள் அகற்ற வேண்டும்.

உயர்பாதுகாப்பு வலயம் என் னும் பெயரில் பொதுமக்களின் வாழ் விடங்களை ஆக்கிரமித்துள்ள இராணுவம் அந்தப் பகுதிகளிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்.

தமிழீழக் கடற்பரப்பில் நடைமுறையில் உள்ள மீன்பிடித்தடை முற்றாக நீக்கப்பட வேண்டும்.


இலங்கைத்தீவின் தேசிய இனப் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு காணப்படும் வரை தமிழ் அகதிகள் இலங்கைத்தீவுக்கு திருப்பி அனுப்பப்படுவது முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலை நிறுத்தப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த உரிமைக்குரல் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறுகிறது.

அனைத்துலகத்தின் மனக் கதவின் மேல் தமிழரின் கரங்களைத் தட்டிட - தமிழர் தன்னாட்சியுடன் வாழ துணைசெய் அல்லது பிரிந்து போவதை அங்கீகரி என உரிமைக்குரல் எழுப்பிட - குருதியில் குளிப்பது தமிழரின் விதியா? உலகமே இன்றும் மௌனமே பதிலா? என்று கேள்விகளோடு (8ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு உகந்த சூழல் இல்லை



## அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

கொழும்பு —

வடக்கு-கிழக்கு பகுதிகளில் மென் தீவிர யுத்தம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்ற நிலையில்-சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு உகந்த முன்னேற்றகரமான சூழ்நிலை இருப்பதாக தெரியவில்லையென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கிலவார இதழான சண்டே லீடருக்கு அளித்த பேட்டியிலேயே அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான ஐரோப்பியத் தடையானது மகிந்த ராஜபக்ச நிர்வாகத்தினது இரட்டை வேடத்தை வெளிப்படுத்துகின்றது.

இந்தத்தடை மூலம் துணை இராணுவக் குழுக்களது வன்முறைகள் அதிகரித்து நிலைமையை மேலும் மூடக்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்க உயர்மட்ட பிரதிநிதி வியாழனன்று கொழும்பு வருகை

கொழும்பு —

இலங்கை அரசாங்கத்துக்கான அமெரிக்காவின் விசேட செய்தி ஒன்

வாயன்று நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்குப் பின்னர் றிச்சர்ட் பௌச்சர் கொழும்

## கடத்தப்பட்ட இளைஞர் சடலமாக மீட்பு

திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் இறங்குதுறையில் மக்கள் முன்னிலையில்

## தனங்களப்பில் 2 படையினர் காயம்!

யாழ்ப்பாணம் —

தென்மராட்சியில் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள தனங்களப்பில் இராணுவ நிலை ஒன்றின் மீது கைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 7.25

கிறது.

இந்தச் சம்பவத்தில் இரு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக ஹெலி மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கொழும்பு —

இலங்கை அரசாங்கத்துக்கான அமெரிக்காவின் விசேட செய்தி ஒன்றைக் கையளிப்பதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான செயலர் றிச்சர்ட் பௌச்சர் எதிர்வரும் 1ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

ரோக்கியோவில் எதிர்வரும் செவ்வாயன்று நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்குப் பின்னர் றிச்சர்ட் பௌச்சர் கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ரோக்கியோ மாநாட்டில் இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(8ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை —

திருகோணமலை - மூதூர் இறங்குதுறையில் மக்கள் முன்னிலையில் இராணுவப் புலனாய்த்துறையினரால் வெள்ளை வானில் கடத்தப்பட்ட மாதவராசா சதானந்தன் படுகொலை செய்யப் (8ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நிலை ஒன்றின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 7.25 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கைக்குண்டுத் தாக்குதலையடுத்து சிறிது நேரம் துப்பாக்கி மோதலும் இடம்பெற்றதாகக் கூறப்படு

உடனடியாக ஹெலி மூலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் படைத்தரப்புக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொலைத் தொடர்பு நிலையத்தினுள்! இரு இளைஞர்கள் சுட்டுக்கொலை

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

...கானை —

வட்டுக்கோட்டையில் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றினுள் நுழைந்த ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை-மூளாய்-மாவடி வீதியில் இடம்பெற்ற இந்தச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது-

வட்டுக்கோட்டை காளி கோவிலடியைச் சேர்ந்த அமர்தலிங்கம் சபேசன் என்பவர் நேற்று மாலை 5 மணியளவில்மூளாய் வீதியிலுள்ள தொலைத் தொடர்பு நிலையத்துக்கு தொலைபேசி அழைப்பொன்றை எடுப்பதற்காக சென்றிருந்தவேளை அங்கு வந்த ஆயுததாரிகள் உள்ளே நுழைந்து மேற்படி இளைஞனின் கைகள், கால்களை கட்டிய பின்னர் இவர் மீதும் தொலைத் தொடர்பு நிலையத்தின் உரிமையாளர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றனர்.

மேற்படி இளைஞர் அந்த இடத்திலேயே உயிரிழந்ததுடன் தலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தொலைத் தொடர்பு நிலையத்தின் உரிமையாளரான விமலசூரியர் கேகுலராஜா மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்றிரவு 10.30 மணியளவில் உயிரிழந்தார். (43)

# வில்பத்தில் காணாமற்போனோர் சிதைந்தநிலையில் சடலங்களாக மீட்பு





கொழும்பு —

வில்பத்து சரணாலயத்துக்குள் காணாமற்போன 8 பேரும் நிலக்கண்ணிவெடியில் சிக்கி உயிரிழந்ததாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

வில்பத்து சரணாலயத்தின் பிரதான நுழைவாயிலிலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள அடர்ந்த காட்டுப்பகுதியில் சுற்றுலா பயணிகள் சென்ற ஜீப் நிலக்கண்ணி வெடியில் சிக்கியது. அடுத்தடுத்து 3 குண்டுகள் வெடித்ததாகவும், இதனால் அந்த ஜீப் சுக்குநூறாகச் சிதறியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று இராணுவ, பொலிஸாரைக் கொண்ட கூட்டு அணியொன்று சம்பவ இடத்துக்குச் சென்று தேடுதலில் ஈடுபட்டது. இதன்போது பாரிய குழிகளுக்கருகே ஜீப் வண்டியின் சிதைந்த பாகங்களும், உருக்குலைந்து சிதறிய சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.


காணாமற்போன 7 பேரினது சட

(8ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்

# உயிரிழந்தோர் தொகை நான்காயிரம்!





ஜகார்த்தா —

இந்தோனேஷியாவின் யோக்யர்தா பகுதியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை நான்காயிரத்தைத் தாண்டியுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இங்கு யோக்யர்தா, பான்துல் ஆகிய நகரங்களும் அதைச் சுற்றியுள்ள ஏராளமான கிராமங்களும் மிகப் பலத்த சேதத்தை சந்தித்துள்ளன.

இதில் பான்துல் நகரம் அடியோடு அழிந்து விட்டது. இங்குள்ள 80 சத வீத வீடுகள், கட்டடங்கள் இடிந்து விட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இங்கு மட்டும் 2 ஆயிரம் பேர் பலியாகினர்.

யோக்யர்தா -இந்தோனேஷியாவின் தலைநகரமான ஜகார்த்தாவுக்கு அடுத்து பெரிய நகரமாகும். இங்கும் ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன. இது பழங்கால நகரம். எனவே ஏராளமான பழங்கால கட்டடங்களும் இடிந்தன.

இவற்றில் 7 ஆம் நூற்றாண்டு பரோபுகார் புத்த ஆலயம், பராம்பரன் இந்துக்கோவில் ஆகியவை உள்ளன. முக்கிய சுற்றுலாத் தலமான இந்த கோவில்களின் ஒரு பகுதியும் இடிந்து உள்ளது. இந்து கோவில் மிக பலத்த சேதத்தை சந்தித்து இருப்பதாக அரசு கூறியுள்ளது. இவற்றில் இடிபாடுகளுக்குள் சிக்கி பலர் பலியாகினார்கள். நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர்.

யோக்யர்தா நகரில் இறந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டி இருக்கிறது. இந்த நகரம் 30 கிலோ மீற்றர் சுற்றளவு கொண்டது.

இந்த நகருக்கு அருகே உள்ள 3 கிராமங்கள் முற்றிலுமாக அழிந்து விட்டன. பூகம்பத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 4 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இன்னும் முழுமையான முறையில் மீட்புப் பணி நடக்கவில்லை. இடிந்த கட்டடங்கள் பல அப்படியே கிடக்கின்றன. அவற்றுக்கு அடியில் ஏராளமான சடலங்கள் கிடக்கின்றன. எனவே உயிரிழப்புக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் பேர் வரை காயமடைந்திருப்பதாக அந்த நாட்டு துணை ஜனாதிபதி யூசுப் கல்லா கூறினார்.

அவர்கள் 21 வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். பல வைத்தியசாலைகளின் கட்டடங்கள் பூகம்பத்தால் சேதம் அடைந்துள்ளன. எனவே காயமடைந்தவர்களுக்கு திறந்த வெளியில் வைத்து சிகிச்சை அளிக்கப்படுகின்றது. பலர் மரத்தடியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சிகிச்சை அளிப்பதற்கு தேவையான மருந்துகள், பண்டேஜ் துணிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் படுப்பதற்கு போர்வைத் துணிகள் இல்லாமல் பிளாஸ்டிக் தாள்களில் படுக்க வைக்கப்பட்டுள்ளனர்.

2 இலட்சம் பேர் வீடுகளை இழந்து தெருவில் தவிக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும் நிவாரண உதவிகள் சென்றடையவில்லை.

மீட்கப்பட்ட சடலங்கள் உடனடியாக ஆங்காங்கே குழி தோண்டி மொத்தமாக புதைக்கப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் ஒரே அழுகுரலாகவே இருக்கின்றது.

இந்தோனேஷியாவுக்கு அருகேயுள்ள நாடான மலேசியாவில் இருந்து 56 பேர் கொண்ட மீட்புக் குழு அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். ரஷ்யா உட்பட பல நாடுகளும் மீட்புக் குழுவை அனுப்புவதாக அறிவித்துள்ளன. ஆனால் இன்னும் அவர்கள் பூகம்பப் பகுதிக்குச் சென்றடையவில்லை.

இந்தோனேஷியா அரசிடம் மீட்புப் பணிக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாததால் மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இப்போது இடிபாடுகளுக்குள் சிக்கி உயிருடன் இருப்பவர்களை மீட்பதற்கே முக்கியத்துவம் கொடுத்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கா உடனடியாக 5 லட்சம் டொலர் நிவாரண உதவி அளிப்பதாக அறிவித்துள்ளது. யுனிசெப் நிறுவனம் 9 ஆயிரம் தார்ப்பாய், 2 ஆயிரம் கூடாரம் ஆகியவற்றை அனுப்பி வைத்துள்ளது. இத்தாலி 27 தொன்களைக் கொண்ட கூடாரம் மற்றும் நிவாரண உதவிப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளன.

ஐரோப்பிய யூனியன்- டொக்டர்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது. 38 லட்சம் மில்லியன் டொலர் பண உதவியும் அளித்துள்ளது.

ஆனால் நிவாரணப் பொருட்களை யோசியா கார்த்தா நகருக்கு கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இங்குள்ள விமான நிலைய ஓடுதளம் நில நடுக்கத்தால் விரிசல் அடைந்துள்ளதால் விமான நிலையம் மூடப்பட்டது. நிபுணர்குழு இந்த இடங்களை ஆய்வு செய்யவுள்ளது. அதன் பிறகு விமானங்கள் தலை இறங்க அனுமதிக்கப்படும். எனவே நிவாரணப் பொருட்கள் வரத் தாமதமாகின்றது.

பூகம்பம் ஏற்பட்ட பகுதியில் மீண்டும் நில நடுக்கம் ஏற்படலாம் என்ற பீதி மக்களிடையே நிலவுகின்றது. எனவே பெரும்பாலான மக்கள் வீட்டை விட்டு வெளியேறி திறந்த வெளியில் தங்கியுள்ளனர்.

## மியான்மார் எதிர்க்கட்சி தலைவியின் வீட்டுக்காவல் மேலும் நீடிப்பு!

பாங்கொக் —

மியான்மர் நாட்டில் ஜனநாயக ஆட்டிக்காக போராடி வரும் எதிர்க்கட்சி தலைவி சூகியை இராணுவ அரசாங்கம் வீட்டுக்காவலில் வைத்துள்ளது. அவரது காவல் நேற்று முன்தினம் முடிவடைய இருந்தது. எனவே சூகியை விடுதலை செய்ய வேண்டும் என்று ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனன் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

ஆனால் கொபி அனானின் கோரிக்கைக்கு நேர்மாறாக சூகியின் வீட்டுக் காவலை மேலும் ஒரு ஆண்டுக்கு நீடித்து நேற்று முன்தினம் இராணுவ அரசாங்கம் உத்தரவிட்டது. கடந்த 16 ஆண்டுகளில் 10 ஆண்டுகளை சூகி சிறையிலும், வீட்டுக்காவலிலுமாக கழித்து வருகிறார்.

கடைசியாக அவரை 2003 ஆம் ஆண்டு கைது செய்து வீட்டுக்காவலில் அடைத்தனர். ஒவ்வொரு ஆண்டும் காவல் நீடிக்கப்பட்டு கொண்டே வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## தொடர் தோல்விகளால் இந்திய அணிக்கு பின்னடைவு

துபாய் —

இந்திய கிரிக்கெட் அணி கடந்த 9 மாதங்களில் மிகச் சிறப்பாக விளையாடியதால் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒரு நாள் போட்டி தரவரிசை பட்டியலில் 3 ஆவது இடத்தை தக்க வைத்துக் கொண்டது.

ஆனால் தற்போது மேற்கிந்திய சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய அணி மிகவும் மோசமாக ஆடி வருகிறது. அந்த அணிக்கு எதிராக 5 ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் முதல் போட்டியில் மட்டும் சரிவை பெற்றுள்ளது.

தொடர் தோல்விகளால் இந்திய அணி 112 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் இருந்து 5ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளது. அவுஸ்ரேலிய அணி தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அந்த அணி 132 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. தென்னாபிக்கா 119, பாகிஸ்தான் 114, நியூசிலாந்து 113 ஆகிய புள்ளிகளுடன் தலா முதல் 4ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளன.

6 முதல் 10 வரையான இடங்களை முறையே, இலங்கை, இங்கிலாந்து, மேற்கிந்தியா சிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய அணிகள் பிடித்துள்ளன.


## ஹற்றன் நஷனல் வங்கி அறிவித்தல்

### அடகுப் பொருட்கள் மீட்டல் / விற்பனைக்கான அறிவித்தல்

எமது கிளைகளான யாழ்ப்பாணம், சுன்னாகம், தெல்லிப்பளை ஆகிய கிளைகளில் அடகு சேவை வசதிபெற்ற வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு,

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒருவருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும், என்பதனை அறியத்தருகின்றோம்.

உங்களால் பெறப்பட்ட கடனின் முழுப்பகுதியையும் உடனே செலுத்தமுடியாவிட்டால் கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ 500) செலுத்தி காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க / காலாவதித் திகதியை நீடிக்க, ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

29.05.2006 [C/5358] முகாமையாளர்.


# 3 ஆம் நாள் ஆட்டம் மழையால் பாதிப்பு!



எட்ஜ்பஸ்டன் —

இலங்கை - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் எட்ஜ்பஸ்டனில் நடைபெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் இலங்கை அணி 5 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் காலை பெய்த மழையால் மூன்றாம் நாள் ஆட்டத்தில் மொத்தம் 34 ஓவர்களே வீசப்பட்டன.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 86 ஓட்டங்களைப் பெற்று தடுமாறிக்கொண்டிருந்த இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்டத்தில் சற்று நிதானமாக ஆடி ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 30 ஆட்டமிழக்காமல் இருந்த வன்டோட்டும், 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த டில்ஷானும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

இருவரும் மிகச்சிறப்பாக துடுப்பெடுத்தாடி தமக்கிடையில் 125 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்த நிலையில் 59 ஓட்டங்களுடன் டில்ஷான் ஹொகாட்டின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



வன்டோட் மிகவும் நிதானமாக ஆடி 246 பந்துகளில் 8 பவுண்டரிகள் அடங்கலாக 89 ஓட்டங்களுடனும், மஃறூப் ஓட்டதையும் பெறாத நிலையிலும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

பந்துவீச்சில் ஹொகாட் 3, பனேசர் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இன்னும் இரு நாட்கள் மீதமுள்ள நிலையில் இங்கிலாந்து அணியின் வெற்றிவாய்ப்பு பிரகாசமாக உள்ளது.


**மனோகரா** யாழ்ப்பாணம்

அஜித்குமார், சதா

மற்றும் பலர் நடித்த

ஏழாவது வெற்றி வாரம்

திருப்பதி



காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30

**ராஜா** யாழ்ப்பாணம்



பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த

பட்டியல்

புதிய வெளியீடு

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார் - மீனா - வடிவேல்

நடித்த

மாயி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

**கோட்டல் குத்தகைக்கு**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான கோட்டல் ஒன்று குத்தகைக்கு விடப்படும்.

தொடர்பு :

077 7178493


## சிறு விளம்பரங்கள்

### மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் வருடம் உத்தர நட்சத்திரம், 1ஆம் பாகம், பாதம் 33, செவ்வாய் தோஷமற்ற, சிவில் பொறியியலாளருக்கு படித்த, சிவந்த, மெல்லிய, அழகான மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். புகைப்படம், சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம் 53 -நமது ஈழநாடு, 267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2278)

# சர்வதேச பிரதிநிதிகளுடன் வந்து வன்னியில் நோட்டமிடும் விமானிகள்!

## இணையத்தளம் சந்தேகம்



கொழும்பு —

நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயரை அழைத்து வந்த விமானப்படை ஹெலியில் வழக்கத்துக்குமாறாக மூன்று விமானிகள் பயணித்ததாகவும் -

இது தாக்குதலுக்கான இடங்களை நோட்டமிடுவதான ஒரு முயற்சியாக இருக்கலாம் என்றும் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

சர்வதேச பிரதிநிதிகளை கிளிநொச்சிக்கு அழைத்து வரும் விமானப்படை ஹெலியில் வழமையாக இரு விமானிகள்தான் பயணிப்பர்.

ஆனால், கடந்த முறை கிளிநொச்சிக்கு அகாசி பயணம் மேற்கொண்ட போது வழக்கத்துக்கு மாறாக மூன்று விமானிகள் வந்தனர்.

அகாசியின் இந்தப் பயணத்துக்கு பின்னர்தான் - கிளிநொச்சி மீது விமானக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

அதேபோல் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி வந்த நோர்வே விசேட தூதுவர் ஹன்சன் பௌயர் வந்த ஹெலியில் மூன்று விமானிகள் வந்துள்ளனர்.

ஹெலி இறங்கிய போது திறந்திருந்த முன்பக்கத்தில் விமானியின் பகுதியில் மூவரும் அமர்ந்திருந்தனர். பின்னர் அவர்கள் கதவை மூடிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ரோக்கியோ மாநாட்டில் பங்கேற்போர் அறிவிப்பு

கொழும்பு —

இலங்கையில் அதிகரித்துவரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயவே எதிர்வரும் 30 ஆம் திகதி ரோக்கியோ இணைத் தலைமை நாடுகள் கூட்டம் நடைபெறவுள்ளதாக கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் -

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள பேச்சுக்களில் ஜப்பானிய விசேட தூதுவர் யசுசி அகாஷி, நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள தெற்கு மத்திய ஆசிய பகுதிக்கான செயலாளர் றிச்சர்ட் பௌச்சர், ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஹேவ்ஜோன்ஜின் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாதகல் முகாமருகே நடமாடியவர் கைது!

கொழும்பு —

மாதகல் கடற்படை முகாமுக்கு அருகே சந்தேகத்துக்கிடமாக நடமாடிய ஒருவரை கைதுசெய்திருப்பதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த 24 ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கைதுசெய்யப்பட்டவர் 45 வயதுடைய சுழிபுரம் மேற்கு வாசி என்றும் அவரிடம் கைக்குண்டு ஒன்றைத் தாம் மீட்டதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைக்காக இவர் வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முன்னாள் ஜனாதிபதியின் வீட்டை ஒப்படைக்க அரசு வலியுறுத்து!



கொழும்பு —

முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜயதுங்கவின் உத்தியோகபூர்வ இல்லத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்கவேண்டும் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

கடந்த 24 ஆம் திகதி விஜயதுங்கவின் இல்லத்தினரை தொலைபேசியில் அழைத்த கெஹலிய - அரசாங்கத்திடம் அந்த இல்லத்தை ஒப்படைக்கவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிவித்தார்.

ஆனால், அவரது குடும்பத்தினர் இதை மறுத்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷ ஒப்படைக்கக் கோரினால் இல்லத்தை கையளித்து விடுமாறு உடல் நலக் குறைவாக இருந்த விஜயதுங்க தெரிவிக்கவில்லை என்றும் - சட்டப்படி முன்னாள் ஜனாதிபதிக்குரிய உத்தியோகப்பூர்வ இல்லம் இது என்றும் அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

# கொழும்பு மாநகர மேயராக ஓட்டோச் சாரதி நியமனம்!

கொழும்பு —

கொழும்பு மாநகரசபை மேயராக மொகமெட் இம்தியாஸ்(வயது 22) என்ற ஓட்டோ சாரதி தெரிவாகியுள்ளார்.

கொழும்பு மாநகர சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன் சுயேட்சைக் குழு - 3 வெற்றி பெற்றது.

இந்தக் குழுவினர் சார்பில் மேயராக உவைஸ் மொகமட் இம்தியாஸ் மற்றும் பிரதி மேயராக கனகமே சந்திரசேன (வயது 65) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இருவரது தெரிவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் வாரம் வெளியிடப்படவுள்ளது.

வர்த்தமானி அறிவித்தலுக்குப் பின்னர் இருவரும் பதவியேற்கவுள்ளனர். சுயேட்சைக் குழு - 3 அணியினது தலைவர் அன்னாபிள்ளை இராஜேந்திரனின் உறவினர் மொகமட் இம்தியாஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

# மிக முக்கிய பிரமுகர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடும்!

## ஜனாதிபதி மகிந்த எச்சரிக்கை



கொழும்பு —

இலங்கையிலுள்ள மிகவும் முக்கியமான பிரமுகர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாமெனவும், எனவே அவதானமாக செயற்படுமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார். கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கனடா, ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் நாடுகளிலிருந்து இது தொடர்பான தகவல் எனக்குக் கிடைத்துள்ளது. இந்த விடயத்தில் அமைச்சர்கள் அவதானமாக இருக்க வேண்டும். விடுதலைப் புலிகளுக்காக நாம் அச்சமடையத் தேவையில்லை. ஆனால், தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

இலங்கையின் முக்கிய இடங்களும் இலக்கு வைக்கப்படலாம். இது தொடர்பாக பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு கொழும்பில் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொலிஸாரின் சீருடையில் பொலிஸாரது வாகனம் அல்லது மோட்டார் சைக்கிள் மூலமாக இத்தகைய தாக்குதல் நடத்தப்படலாமென அரசாங்கத்துக்கு தகவல் கிடைத்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலையடுத்து அனைத்து பொலிஸ் நிலையங்களும் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

# அரச சார்பற்ற நிறுவனங்களின் வரையறை குறித்து ஆய்வு



கொழும்பு —

அரசாங்கத்தில் பதிவு செய்யப்படுகின்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான வரையறை குறித்து தீவிரமாக ஆய்வு செய்து வருவதாக நாடாளுமன்ற பொறுப்புக் குழுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பான நாடாளுமன்ற பொறுப்புக் குழுவின் தலைவராக ஜே.வி.பியின் நந்தன குணதிலக்க நியமிக்கப்பட்டிருந்தார். அவர் கடந்த வாரம் அந்தப் பொறுப்பிலிருந்து விலகியதையடுத்து விஜித் ஹேரத் நியமிக்கப்பட்டார்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் பல சமூக சேவைகள் அமைச்சின் கீழும், வர்த்தக நிறுவன சட்டங்களின் கீழும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பழைய மாணவர் சங்கங்கள் கூட ஒரு அரச சார்பற்ற நிறுவனமாக அழைக்கப்படுகிறது. இந்த நிலையை மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று விஜித ஹேரத் தெரிவித்தார்.

கடந்த பிரேமதாச ஆட்சிக் காலத்தில் நீதிபதி ராஜ வனசுந்தர தலைமையில் அமைக்கப்பட்ட இதேபோன்ற நாடாளுமன்ற பொறுப்புக் குழுவின் பரிந்துரையையும் ஆராய்ந்து வருவதாகவும் எது அரச சார்பற்ற நிறுவனம் என்று வரையறை விரைவில் உருவாக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் குழுவில் மொத்தம் 29 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர்.

# ஐ.நா சபையை அழைக்கும் திட்டம் அரசிடம் இல்லை!



கொழும்பு —

ஐ.நா அமைதிப்படையை அழைக்கும் திட்டம் எதுவும் இலங்கை அரசிடம் இல்லையென அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

அரசு வன்முறைகளைக் கட்டுப்படுத்தாவிடின் ஐ.நா அமைதிப்படையை அழைக்கும் நிலை ஏற்படும் என ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டபோதே அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# இந்திய பாதுகாப்பு ஆலோசகருடன் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்து பேச்சு!



கொழும்பு —

நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைக்கான விசேட சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணனை சந்தித்துப் பேசினார்.

புதுடெல்கியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இலங்கை நிலைமைகள் குறித்தும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்புகள் குறித்தும் இந்தியத் தரப்புக்கு எரிக் சொல்ஹெய்ம் விளக்கமளித்தார்.

மேலும் இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா பாரிய பங்காற்ற வேண்டும் என்றும் இந்தியத் தரப்பினரை எரிக் சொல்ஹெயெம் வலியுறுத்தினார்.

அதேபோல் நாளை டோக்கியோவில் தொடங்கும் இணைத் தலைமை நாடுகள் கூட்டத்தில் இந்தியாவும் பங்கேற்க வேண்டும் என்று எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்தியதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

ஆனால், இணைத் தலைமை நாடுகள் குழுவில் பங்கேற்க இந்தியா விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

இலங்கையின் நிலைமை குறித்தும், தமிழ்நாட்டுக்கு ஈழத் தமிழர்கள் அகதிகளாக வருவது குறித்தும் இந்தியா கவலை கொள்வதாக இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போர்நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் குறித்து மட்டும் பேசாமல், அரசியல்தீர்வு குறித்தும் பேச வேண்டிய சூழ்நிலை உள்ளதாகவும், இந்திய கூட்டமைப்பு குறித்து இலங்கையிலும் பரிசீலிக்கலாம் என்றும் இந்தியத் தரப்பில் கூறப்பட்டதாக புதுடெல்கி செய்திகள் தெரிவித்தன.

# இந்திய பெற்றோலிய நிறுவன மோதலுக்கு சமரசத் திட்டம்!

கொழும்பு —

இலங்கையில் உள்ள இந்திய பெற்றோலிய நிறுவனத்துக்கும் அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள மோதலுக்கு சமரச திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2006 ஏப்ரல் வரை இந்திய பெற்றோலிய நிறுவனத்துக்கு 76 மில்லியன் அமெரிக்க டொலரை மானியமாக அரசாங்கம் செலுத்தவேண்டியுள்ளது.

இந்திய பெற்றோலிய நிறுவனம் இதைக் கோரியபோது பெற்றோலிய நிறுவனத்தின் லாப நட்டக் கணக்குகளைத் தாக்கல் செய்யுமாறு கூறி அரசாங்கம் இந்தத் தொகையை செலுத்த மறுத்துவிட்டது.

இதையடுத்து நிலுவையில் உள்ள மானியத் தொகை செலுத்தப்படாத வரை எண்ணெய் இறக்குமதி ஏதும் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று இந்திய நிறுவனம் அறிவித்தது.

இந்த நிலையில் பெற்றோல் கையிருப்பானது 20 நாட்களுக்கும், டீசல் கையிருப்பானது 45 நாட்களுக்கு மட்டுமே இருப்பதாகவும் அந்த நிறுவனம் அறிவித்தது. இலங்கையில் மொத்தம் 160 எரிபொருள் நிலையங்களை இந்திய நிறுவனம் நடத்தி வருகின்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இந்திய நிறுவன இயக்குநர் கே. இராமகிருஸ்ணன் கடந்த வெள்ளிக்கிழமை திறைசேரி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவை சந்தித்து இது குறித்து பேசியதாகவும், சமரசத் திட்டம் ஒன்றை அவர் கையளித்துள்ளதாகவும் கூறினார்.

அதில் குறிப்பிட்டுள்ள தொகையால் எமது நிறுவனத்துக்கு இழப்பே ஏற்படும் என்றும் - நாம் வர்த்தக ரீதியாக இயங்குவதற்கான தொகை செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் ஜோன் ஹன்சன் பௌயர் சந்திப்பு!





கிளிநொச்சி—

இலங்கைக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஹன்சன் பௌயர் நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடினார்.

கிளிநொச்சியில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணிகத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வாழும் மக்களின் நிலைமைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப் பட்டது.

வடக்கு - கிழக்கில் தற்போதைய இராணுவ அச்சறுத்தல்கள் காரணமாக இடம்பெயர்ந்து வன்னிப் பெருநிலப்பரப்புக்குள் வந்துள்ள மக்களின் தற்போதைய வாழ்வியல் சூழ்நிலைகள் தொடர்பாகவும், அவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும், இடம்பெயர்ந்த மக்களின் மீள்வாழ்வுக்கான பணிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எவ்வாறு முன்னெடுத்து வருகிறது என்பது தொடர்பாகவும், தொடர்ந்தும் இடம் பெயர்ந்து வரும் மக்களைப் பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள போக்குவரத்துப் பாதை - இடைக்கிடை தடைப்படுவது குறித்தும், அத்தியா வசியப் பொருட்களை குறிப்பாக -கட்டடப் பொருட்களை எடுத்து வருவதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பாகவும், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள்எடுத்து விளக்கியிருந்தனர்.

சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமானப் பணிகள் தாமதமடைந்து வருவது தொடர்பாகவும், அவற்றைத் தொடர்ந்து முன்னெடுப்பதிலுள்ள தற்போதைய நாட்டின் சூழ்நிலைகள் பற்றியும் ஹன்சன் பெயஎருடன் கலந்துரையாடப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன், திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுக் கிளைகளின் செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பணிப்பாளர் பரமேஸ்வரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் சிவனடியார், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் பா.திலகா, வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் திருஞானசம்பந்த மூர்த்தி மற்றும் கிளிநொச்சி மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர் அகியோர் இந்தச் சந்திப்பில் உடனிருந்தனர்.

## விழிப்புணர்வு கருத்தரங்கு

மன்னார்—

மன்னார் - பரப்புக்கடந்தான் கிராமத்தில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கும், நடமாடும் மருத்துவ சேவையும் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

மன்னார் மாவட்ட நலவாழ்வு நிறுவன மாவட்ட இணைப்பாளர் கிருபா சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங் மற்றும் மருத்துவ சிகிச்சையை வழங்கினார்.

இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (09)

## சுதேச வைத்திய பாதுகாப்பு கூட்டம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மாவட்ட சுதேச வைத்திய பாதுகாப்புச் சபைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட சுதேச வைத்திய பாதுகாப்புச் சபைத் தலைவர் வைத்தியர் கே.வி:கே.திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சுதேச வைத்திய மூலிகைகள் உள்ளூரில் உற்பத்தி செய்வதனை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வெனத் தீர்மானிக்கப்பட்டதுடன் உத்தேச மருத்து வகைகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் 25இக்கும் மேற்பட்ட சுதேச வைத்தியர்கள் கலந்து கொண்டதுடன் தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் சுதேச வைத்திய பாதுகாப்புச் சபைக் கூட்டம் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. (09)

## ஊர் கூடி பொங்கு தமிழ் ! நிகழ்வு சிலாவத்தையில்

வட்டநகச்சி—

ஊர்கூடி பொங்குதமிழ் எனும் எழுச்சி நிகழ்வு கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு சிலாவத்தைக் கிராம மக்களால் எழுச்சி பூர்வமாக கொண்டாடப்பட்டது.

சமகால அரசியல் கருத்துரைகளையும், நாடு எதிர் கொண்டுள்ள நெருக்கடியான சூழலை மக்களுக்கு எடுத்து விளங்கும் முகமாகவும் ஊர் கூடி பொங்கு தமிழ் என்ற நிகழ்வை எழுச்சி பூர்வமாக நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வு பிற்பகல் 4.30 மணியளவில் சிலாவத்தை தற்காலிக மக்கள் குடியிருப்பு மைதானத்தில் ஆரம்பமானது.

நிகழ்வில் பொதுச் சுடரை சிலாவத்தை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை கடற் புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் ஏற்றினார்.

அடுத்து அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் எழுச்சி இசை நிகழ்வும் இடம் பெற்றது. தொடர்ந்து தமிழீழ தேசியத் தலைவரின் உருவம் தாங்கிய பேரணியும் மைதானத்தை வந்தடைந்தது. இந்த நிகழ்வில் பெரும் திரளான மக்கள் கலந்து கொண்டனர். (09)

## அனுமதி பெறாது இயங்கிய 22 வர்த்தக நிலையங்கள்

வட்டக்கச்சி—

கிளிநொச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றிச் செயற்பட்டு வரும் 22 வர்த்தக நிலையங்கள் கடந்த வெள்ளிக்கிழமை திடீர் பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன.

பிரதிச் சுகாதார சேவை பணிமனையினரும், தமிழீழ சுகாதார சேவை சூழல் பாதுகாப்புப் பிரிவினரும், கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் இணைந்து கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முதல் பரந்தன் வரை ஏ -9 வீதியின் இரு பகுதிகளிலும் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட வேளையே இந்த 22 வர்த்தக நிலையங்களும் அனுமதி பெறப்படாது இயங்கி வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேற்படி அனுமதியின்றி செயற்பட்ட வர்த்தக நிலையங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வுள்ளதாக கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் தெரிவித்தார். (09)

## கோட்டை கட்டிய குளத்தில் மக்கள் கட்டுமானப் பயிற்சி

முல்லைத்தீவு—

முல்லைமாவட்டம் - கோட்டை கட்டிய குளம் பகுதியில் கட்டுமானப் பயிற்சியும், சமகால அரசியல் கருத் தரங்கும் நடைபெற்றன.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணியளவில் கோட்டை கட்டிய குள தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் இலட்சினேஸ்வரன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் பொதுச் சுடரை இலங்கேஸ்வரன் ஏற்ற தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து கரும்புலி மாவீரர் மேஜர் தனிச் சுடரது திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை அவரின் பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் மல்லாவிக் கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் அருந்தவம் கருத்துரை வழங்கினார்.

தமிழீழ பொருண்மிய மோம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் சிறப்புரை வழங்கினார்.

இதேபோல் அம்பலப்பொருமாள் குளத்திலும் பயிற்சி ஆசிரியர் விஜயகாந் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகி கருத்துரைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

## கட்டுமான பயிற்சி நிறைவு நிகழ்வு

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி மாயவனூர் பெண்கள் அணியினருக்கான மக்கள் கட்டுமானப் பயிற்சி நிறைவு நாள் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் மாயவனூர் பாடசாலை மைதானத்தில் அரச அறிவியற் கல்லூரியைச் சேர்ந்தவரும், அரசியல் சிறப்பு வேலைத் திட்டப் பொறுப்பாளருமான சாகியன் தலைமையில் இடம்பெற்றன.

பொதுச்சுடரைப் வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் திருமாறன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியை 2 ஆம் லெப். மாலதி பயிற்சிப் பாசறையின் பயிற்சி ஆசிரியர் இளநிலவன் ஏற்றி வைத்தார். நிகழ்வில் கருத்துரையை மாயவனூர் கிராம அலுவலர் ரூபசிங்கம் வழங்க சிறப்புரைகளை சிறப்பு வேலைத்திட்டப் பொறுப்பாளர் சாகியன், தூயவன் அரசறிவியற் கல்லூரியின் முதல்வர் அரசண்ணா ஆகியோர் நிகழ்த்தினர். (09)

## கணினிக் கற்கைநெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு




வட்டக்கச்சி—

வட்டக்கச்சி ஓ.ஆர்.ஜி கணினிக் கற்கை நிலையத்தில் கணினிக் கற்கை நெறியை நிறைவு செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி - வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் அமைந்துள்ள கணினிப் பயிற்சி நிலையத்தில் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் வட்டக்கச்சி மகா வித்தியாலய பிரதி அதிபர், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஆகியோர் கணினி கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தனர்.

## உடனடி அனர்த்தக் குழு கிராஞ்சியில் உருவாக்கம்

கிளிநொச்சி—

தமிழீழ சுகாதார சேவையினரால் கிராஞ்சி மக்களுக்கு உதவவென கடந்த 23 ஆம் திகதி 15 உறுப்பினர்களைக் கொண்ட உடனடி அனர்த்தக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், முதலுதவிப் பயிற்சி வகுப்புக்களும் நடத்தப்பட்டன.

இந்த அனர்த்தக் குழுவில் உள்ள அனைவரும் அடிப்படைப் பயிற்சியை முடித்ததுடன் முதலுதவி தொடர்பான பயிற்சி வகுப்புக்களும் இவர்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த உடனடி அனர்த்தக் குழுவில் உள்ள அனைவரும் எதிர்வரும் காலங்களில் இயற்கை அனர்த்தங்கள் அல்லது இராணுவத் தாக்குதல் மற்றும் அனைத்து உடனடி அனர்த்தங்களுக்கும் இந்தக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு உதவுவர். அத்துடன் இந்தப் பிதேச மக்களுக்கு அன்றைய தினம் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல் மற்றும் விசர்நாய்க்கடி போன்றவை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வும் நடைபெற்றது.

மேலும் இந்தக் கிராம ரீதியான அனர்த்தக் குழுவில் அடுத்ததாக நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னி கோவிலைச் சேர்ந்த அனர்த்தக் குழு நேற்று தெரிவு செய்யப்பட்டது. (09)

# குமுதினிப் படகு மீண்டும் பழுது; நெடுந்தீவு போக்குவரத்து சிரமம்!

நெடுந்தீவு—

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையே சேவை யில் ஈடுபட்டுவந்த வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான குமுதினிப் படகு மீண்டும் பழுதடைந்துள்ளதால் நெடுந்தீவு மக்கள் நாளாந்தம் பயணத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

படகின் முக்கிய பகுதிகளில் திருத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் இதற்கு சுமார் ஒருமாத காலம் ஏற்படலாம் என பணியாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வருடாந்தம் கடும் காற்று வீசும் காலங்களில் இந்தப் படகு திருத்தத்துக்குட்படுத்தப்பட்டு வருகின்ற செயன்முறை தொடர்வதால் மக்கள் மத்தியில் படகு சேவை தொடர்பாக சந்தேகம் எழுப்பப்படுகின்றமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இதேவேளை தற்போது திறந்த படகுகள் சேவையில் ஈடுபடுவதனால் பயணிகளும், பொருட்களும் கடும் காற்றுக் காரணமாக அள்ளி வீசப்படும் கடல் நீரில் நனையும் நிலையும் ஏற்பட்டுள்ளதுடன் இழப்புக்களும் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையைக் கருத்திற் கொண்டு உரிய அதிகாரிகள் நெடுந்தீவு மக்களது சீரான போக்குவரத்துக்கு வழிசமைக்க விரைந்து உடன் நடவடிக்கையெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (113)

# ஆரம்பக்கல்வி மாணவர்களை பாடசாலைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்—

உயர்தரப் பரீட்சை நடைபெறும் - யாழ். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு மட்டுமே விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன், ஆரம்ப பாடசாலைகள் வழமை போன்று இயங்கி வருகின்றன.

ஆனால், ஆரம்ப பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தமக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என நினைத்து பாடசாலைகளுக்கு சமூகமளிக்காமல் உள்ளனரென அதிபர்கள் விசனம் தெரிவித்தனர்.

கல்வியமைச்சின் அறிவுறுத்தலுக்கமைய உயர்தரப் பரீட்சை நடைபெறும் பாடசாலைகளே மூடப்பட்டுள்ளன. ஆனால் ஆரம்பக்கல்வி பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக நடைபெற்று வருகின்றன.

எனவே ஆரம்பக்கல்வி மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்தி அவர்களை வழமை போன்று பாடசாலைக்கு அனுப்பிவைக்குமாறு அதிபர்கள் கேட்டுள்ளனர்.

# வருடாந்த மஹோற்சவம்!

உடுவில்—

கந்தரோடை அருளானந்த விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8 ஆந்திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும், 10 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் தீர்த்தத் திருவிழாவும், மாலை திருவூஞ்சல் - கொடியிறக்கம் என்பன இடம்பெறும். இந்த மஹோற்சவத்தை சோ.வாகீஸ்வரக்குருக்களாள் நடத்திவைக்கப்படும். (101)

# லங்கா சிமெந்து ஊழியர்களுக்கான விசேட சந்திப்பும், கலந்துரையாடலும்!

உடுவில்—

லங்கா சிமெந்து நிறுவனத்தின் கிளைச் சங்கங்களைச் சேர்ந்த கைத் தொழில் பொதுத் தொழிலாளர்களுக்கான விசேட சந்திப்பும், கலந்துரையாடலும் இன்று காலை 10.30 மணியளவில் இணுவில் தியேட்டர் அருகாமையிலுள்ள லங்கா சிமெந்து காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி கொழும்பு தொழில் நீதிமன்றில் நடைபெற்ற வேலை நீக்கம் சம்பந்தமான வழக்கு விசாரணை மற்றும் 1990 ஆம் ஆண்டில் இருந்து சம்பள நிலுவை பெறுவது சம்பந்தமான தொழில் ஆணையாளரின் விசாரணை முடிவுகள் சம்பந்தமாகவும், நாளை மறுதினம் புதன்கிழமை தொழில் நீதிமன்றில் நடைபெறவுள்ள தொழில் நீக்க கடிதத்துக்கு எதிரான வழக்கு தவணைக்கு கொழும்பு செல்வது சம்பந்தமாகவும் உடன் கலந்துரையாடப்படவுள்ளதால் தவறாது அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தலைவர் செ.தேவகுணாளன் அறிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 24 ஆம் திகதி வழக்குத் தீர்ப்பு வழங்கப்படவில்லை எனவும், இந்தத் தீர்ப்பு நாளை மறுதினம் புதன்கிழமை வழங்கப்படுமெனவும் நீதிமன்றால் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# கட்டடப் பொருட்களுக்கு தடை; தொழிலாளர்கள் பெரும் பாதிப்பு!

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் சீமெந்து மற்றும் கம்பி வகைகள் எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அமைச்சால் தடை ஏற்படுத்தப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டில் சீமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கட்டட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குடாநாட்டில் அதிகளவானோர் கட்டட தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். சீமெந்து மற்றும் கம்பிகள் போன்றவற்றுக்கு தடை ஏற்பட்டுள்ளதால் அவர்களது தொழில் பாதிப்படைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் எந்தவொரு விற்பனை நிலையங்களிலும் சீமெந்து பெறமுடியாத நிலை தோன்றியுள்ளது.

அதோடு சீமெந்தின் விலையும் சில விற்பனை நிலையங்களில் உயர்த்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

சீமெந்து மற்றும் கம்பிகள் என்பவற்றுக்கு தடை ஏற்படுத்தப்பட்டிருப்பதால் வீடுகள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களுக்கென அமைக்கப்பட்டு வந்த கட்டடங்களின் வேலையும் இடைநிறுத்தப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

சீமெந்து தடை காரணமாக கட்டட தொழிலாளர்கள் மற்றும் அத்தோடு சேர்ந்த பல தொழில்களைப் புரிவோரும் பாதிக்கப்பட்டிருப்பதால் தொடர்ச்சியாக இந்தத் தடை ஏற்படுத்தப்பட்டால் அவர்களது பொருளாதாரம் பாதிப்படையும் என தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர்.

## ஓய்வு பெறுகிறார்

சங்கானை—

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் 1972 ஆம் ஆண்டில் இணைந்து கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அந்தச் சங்கத்தின் பொதுமுகாமையாளராகக் கடமையாற்றி வந்த த. செல்வராசா தனது 60 ஆவது வயதில் 34 வருட கூட்டுறவுச் சேவையிலிருந்து நாளை மறுதினம் புதன் கிழமையுடன் ஓய்வு பெறுகிறார்.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : த.பகிதா
முகவரி : நீர்வேலி.

அகவை மூன்று



பெயர் : ம.மதுமித்ரா
முகவரி : வதிரி.

## வாழ்க வளமுடன்




# மாணவர்கள் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்—

மானிப்பாய் சென்.ஆன்ட்.றோ. க.த.க பாடசாலையில் தரம் 1 தொடக்கம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்களையும், கற்பிக்கும் ஆசிரியர்களையும் இன்றுகாலை 8 மணிக்கு பாடசாலைக்குச் சமூகமளிக்குமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

✦ ✦ ✦

யாழ்.கோவில் வீதி கார்மேல் பாலர் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்கான வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகும் எனவும், மாணவர்கள் அனைவரையும் சமூகமளிக்குமாறும் பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

✦ ✦ ✦

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2, 3, 4 தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளன.

வகுப்புக்கள் தினமும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை நடைபெறும் எனவும் அனைத்து மாணவர்களையும் சமூகம் தருமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார்.

# சங்கானை பொலிஸ் நிலைய பாதுகாப்பு பலப்படுத்தல்!

சங்கானை—

சங்கானை சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பு நிலைகள் பலப்படுத்தப்பட்டுவருகின்றன.

இரும்புக்குழாய்கள், கம்பிவலைகள், மண்மூடைகள் மூலம் பொலிஸ் நிலையத்தின் முன்பக்க நுழைவாயில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த பொலிஸ் நிலையத்தின் மீதும், சங் கானை பஸ் நிலையத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதும் இனந்தெரியாதவர்களால் அண்மையில் நடத்தப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலையடுத்து, இவற்றைப் பலப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், இந்தப் பொலிஸ் நிலையத்தோடு இணைந்த கட்டடத்தொகுதியில் இராணுவத்தினரின் படைமுகாமும் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (48)

## அலங்கார அபிஷேகம்

கந்தரோடை—

கந்தரோடை தம்மளை அருள்மிகு நாவலடி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார அபிஷேக ஆராதனைகள் நாளை மறுதினம் புதன்கிழமை மு.ப 11 மணிக்கு ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும் இந்த அலங்கார அபிஷேகம் அடுத்த மாதம் 9ஆம் திகதி வைகாசி விசாக பெருநாளுடன் பூர்த்தியாகுமென கோவில் அர்ச்சகர் சி.சந்தான குமாரசர்மா தெரிவித்தார். (101)

## விளையாட்டு விழா

சித்தன்கேணி—

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் நடத்தும் பாலர் வகுப்பின் 41ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு சித்தன்கேணி பிள்ளையார் ஆலய வீதியில் திருமதி கோமளவல்லி தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலி - மேற்கு பிரதேச செயலாளர் சீ.ஏ.மோகனராஸ் கலந்து கொள்ளவுள்ளார்.

# சைக்கிள் கையளிப்பு!

சாவகச்சேரி—

அறவழிப் போராட்டக்குழுவும், தென்மராட்சி கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனமும் இணைந்து நடத்திவரும் தொழிற்பற்சி நிலையத்தில் மின்இணைப்பு பயிற்சியைப் பெற்றுவரும் பயிற்சியாளர்கள் 25 பேருக்கு அண்மையில் சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

அறவழி செயலகத்தில் டொக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வூஸ்க் நிறுவன உத்தியோகத்தர்களான சிவகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த மின் இணைப்பு பயிற்சி நெறியில் 17 ஆண்களும், 8 பெண்களும் பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தீர்த்தோற்சவத்துக்கு சென்ற பக்தர்கள் படையினரால் சோதனை

திருநெல்வேலி—

திருநெல்வேலி ஸ்ரீ காயாரோஹண சுவாமி (சிவன் அம்மன் கோவில்) தேவஸ்தான தீர்த்தோற்சவத்துக்குச் சென்ற பக்தர்கள் ஆலயச் சூழல் வைத்து இராணுவத்தினரால் கடுமையாகச் சோதனையிடப்பட்டனர்.

இதுவரை காலமும் இந்தப் பகுதியில் வீதிச் சோதனைகளை நடத்தாத படையினர் கடந்த சனிக்கிழமை அதிகாலை முதல் ஆலயத்தில் உற்சவங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆலய சுற்றாடல் வீதியில் வைத்து பக்தர்கள், வாகனங்களில் சென்றோர் எனப் பலரையும் சோதனைக்குட்படுத்தியதால் பக்தர்கள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர்.

மேலும், ஆலய உற்சவங்கள் நிறைவடைந்து பக்தர்கள் ஆலயச் சூழலை விட்டுச் செல்லும் நேரத்தில் இராணுவத்தினரும் வீதிச் சோதனை நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு சென்றமை குறிப்பிடத்தக்கது. (90)

# நிரந்தர வேகத் தடைகளை அமைத்துவரும் படையினர்


யாழ்ப்பாணம்—

வீதிகளை அண்டியுள்ள இராணுவ முகாம்கள், காவலரண்கள் உள்ள இடங்களில் வேகக்கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதற்காக வீதிகளில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த மண் வரம்புகள் தார் கொண்டு நிரந்தர வ ரம்புகளாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், யாழ்.வைத்தியசாலை வீதியின் முலவைச் சந்தியில் புதிதாக இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதுடன், இருபாலை சந்தி இராணுவ முகாமிலும் வீதியோரத்தில் பதுங்கு குழியுடன் கூடிய நிலமட்ட காவலரண் அமைக்கப்படுவதற்கும் படையினரால் மண் வெட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (90)

# தமிழர் பகுதி மீதான தாக்குதலை தடுக்க இந்திய அரசாங்கம் தலையிட வேண்டும்

## பிரதமருக்கு வைகோ கடிதம்



சென்னை —

தமிழர் பகுதிகளில் சிங்கள இராணுவத் தாக்குதலைத் தடுக்க இந்திய அரசு தலையிட வேண்டும் என்று இந்திய பிரதமர் மன்மோகன்சிங்குக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் வைகோ கடிதம் அனுப்பியுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது -

இந்தியர்கள் அனைவருக்கும் மிகவும் கவலை அளிக்கக்கூடிய இலங்கை அகதிகளைப் பற்றிய சில முக்கியமான தகவல்களை தங்கள் மேலான கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"இலங்கைத் தீவிலிருந்து தமிழ் அகதிகள் கூட்டம், கூட்டமாய் தமிழகக் கடலோரப் பகுதியை நோக்கி தங்கள் உயிரைப் பணயம் வைத்து, கொந்தளிக்கின்ற கடலில் வருவது மிகுந்த வேதனை தரக்கூடிய காட்சியாக உள்ளது.

இலங்கை இராணுவம் தமிழர் வாழும் பகுதிகளில் எப்படிப்பட்ட கொடூரமான தாக்குதல் நடத்துகிறது என்பதை அங்கிருந்து அகதிகளாகவரும் தாய்மார்கள் கண்ணீரும், கம்பலையுமாக விபரிப்பது நெஞ்சை உருக்குவதாக உள்ளது.

இத்தகைய கொலைபாதக தாக்குதலில் அப்பாவிப் பெண்களும், குழந்தைகளும் பெருமளவில் இறந்துள்ளார்கள் என்ற செய்தி பேரதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. கடந்த 15 மாதங்களாக இந்தியாவுக்கு வந்த அகதிகளின் எண்ணிக்கை 2 ஆயிரத்தைக் கடந்து உள்ளது. பெருமளவில் இலங்கையில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வருபவர்கள், இன்னும் பலர் தங்களது உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக இலங்கையில் இருந்து இந்தியா வர காத்துக் கொண்டிருப்பதாகக் கூறுவது இந்திய அரசு போதிய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டு உள்ளது.

கடந்த வாரம் நடந்த ஒரு சோகமான நிகழ்வு குறிப்பிடுவதற்கே மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. இலங்கை - மன்னார் தீவிலிருந்து பயணம் செய்த 5 பேர், மோசமான வானிலை காரணமாகவும், கடல் தொடர்பான போதிய தொழில்நுட்பம் இல்லாமையாலும், கடலில் மூழ்கி மடிய நேர்ந்தது.

துன்பத்துக்கு ஆளான தமிழர்கள் அமைதிக்காகவும், ஆறுதலுக்காகவும் இந்தியாவை அடைய முற்படும் போது இந்தச் சம்பவங்களால் கடலே அவர்களுக்குக் கல்லறையாகிவிடுகிறது. இந்த வாரம் ஒரு கண்ணாடி இழைப் படகு கடல் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டது. அதற்கு முன்னர், இந்தியக் கடலோர காவல்படையினர் இலங்கையில் இரு ந்து அகதிகளை ஏற்றிவந்த சில படகுகளைக் கைப்பற்றி காவல்துறையிடம் ஒப்படைத்துபோது, அந்தப்படகுகளை காவல் துறையினர் பறிமுதல் செய்துள்ளார்கள்.

போர் அபாயத்தால் சீரழிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் பாது காப்புக்காக இந்தியா வரும்போது, மோசமான வானிலை, கடல் தொழில்நுட்ப மின்மை, இந்திய அளவில் படகு பறிமுதல் பற்றிய பயம் ஆகிய தடைகளையும், சங்கடத்தையும் சந்தித்து பெரும் சிரமத்துக்கு உள்ளாக வேண்டியுள் ளது.

ஏற்கனவே இந்திய அரசு, தமிழகத் தின் பல பகுதிகளில் பல்வேறு அகதிகள் முகாம்களில் 75 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகளை தங்க வைத்துப் பராமரித்து வருகிறது. நம்மிடம் அடைக்கலம் தேடிவரும் அகதிகளை ஏற்றுக் கொள்வதையே நாம் ஒரு கொள்கையாகக் கொண்டிருக்கிறோம்.

இன்று இலங்கைத் தீவில் நடந்து கொண்டிருப்பது அதன் உள்நாட்டுப் பிரச்சினை மட்டும் இல்லை. அது சர்வதேச கவனத்தையும் கவரக் கூடிய மனிதாபிமான பிரச்சினை. இந்தக் காலகட்டத்தில் மறைந்த அன்றைய பாரத பிரதமர் இந்திராகாந்தி - அன்றைய கிழக்கு பாகிஸ்தான், இன்றைய பங்களாதேசத்திலிருந்து அகதிகள் கூட்டங் கூட்டமாய் வருவது தொடர்பாகக் குறிப்பிட்ட சரித்திர புகழ்வாய்ந்த ஒரு செய்தியை இங்கு கூறவிரும்புகிறேன்.

"அகதிகள் பிரச்சினை என்பது மனிதாபிமானப் பிரச்சினை. இது தொடர்பாக இந்தியா கண்மூடி இருக்க இயலாது" என்பதாகும். தொன்றுதொட்டு தமிழ் நாட்டிலுள்ள தமிழர்களுக்கும், இலங்கை வாழ் தமிழர்களுக்கும் தொப்புள் கொடி உறவு உண்டு. எனவே, இந்திய அரசு அரசியல் ரீதியாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழர் பகுதிகளில் இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்தச் செய்ய வேண் டும்.

இந்தியா வந்தடையும் அகதிகளுக்குப் போதிய பாதுகாப்பும், உதவிகளும் செய்ய இந்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியப் பகுதிகளில் அகதிகள் இறப்பும், காணாமல் போவதும் தடுக்கப்படவேண்டும்.

இந்த நிகழ்வுகள் தரைப்பகுதியில் நடந்தால் ஏற்படும் இழப்புகள் மிகக் குறைவாகவே இருக்கும். இந்தச் சம்பவங்கள் நீர் நிறைந்த நடுக்கடலில் நடப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் பெரிதும் கடமைப்பட்டு உள்ளோம்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இந்திய பிரதமர் கீழ் காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

பாம்பன் தீவிலிருந்து (இராமேஸ் வரம் தீவு) கிழக்கே 11 கிலோ மீற்றர் தொலைவில் -சர்வதேச எல்லை உள் ளது. தனுஷ்கோடி பழைய அலை தாங்கியில் தொடங்கி 15கிலோ மீற்றர் தூரம், சேது மணல் தொடரின் வடக்குப்பகுதி முழுவதும் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படையின் 24 மணி நேரக் கண்காணிப்பு பணி தொடர வேண்டும். அகதிகள் ஏற்றப்பட்ட படகுகள் தனுஷ் கோடியில் அகதிகளை எந்தப் பிரச்சினையும் இன்றி இறக்கிவிட்ட பின்னர் மீண்டும் மன்னார் தீவுக் குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். அனைத்து அகதிகளும் இங்கு வந்த பிறகு அவர்களுக்கு உரிய அடிப்படைத் தேவையான உணவு, உடை, முதலுதவி அனைத்தும் அளிக்கப்பட வேண்டும்.

அடையாள அட்டை வழங்குதல், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அரச சார்பில் செய்ய வேண்டிய சம்பிரதாயங்கள் நிறைவேற்றப்படு முன் இந்திய அதிகாரிகள் அகதிகளை மண்டபம் முகாமுக்கு அழைத்துச்சென்று பாதுகாப்பாகத் தங்க வைக்க வேண்டும். இந்தப் பணியில் அரசு அதிகாரிகளுக்கு உதவியாக சமூக ஆர்வலர்களின் சேவை பயன்படுத்தப் படலாம்.

மிகவும் இக்கட்டான நேரத்தில் எடுக்கப்படும் மேற்கண்ட நடவடிக்கை கள் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களோடு தொப்புள்கொடி உறவுள்ள பாதுகாப்புக் காக அல்லல்பட்டுக்கொண்டு இருக்கும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்த பேருதவியாக இருப்பதோடு, அமைதியையும் அளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைப் பிரச்சினையிலும் இந்தியாவின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலையிடும்

## என்கிறது இந்தியன் எக்ஸ்பிரஸ்

சென்னை —

நேபாளத்தைப் போல் இலங்கை இனப்பிரச்சினையிலும் தலையிட இந்திய மார்க்சிஸ்ட் கட்சி முன்வந்துள்ளது.

இது தொடர்பாக இந்தியாவின் ஆங்கில நாளேடான இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியாகியுள்ள செய்தியில் -

நேபாளத்தில் ஜனநாயகத்தை மீள வெற்றிகரமாக உருவாக்கியிருக்கும் நிலையில் தற்போது இலங்கை இனப்பிரச்சினையில் தன் காய்களை இந்திய மார்க்சிஸ்ட் கட்சி நகர்த்துகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கண்டிப்பாக முடங்கியிருக்கும் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும் என்று அந்தக் கட்சி வலியுறுத்துகிறது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக பிரகாஸ் கரத்தும், மத்திய குழு உறுப்பினராக உள்ள சீத்தாராம் யெச்சூரியும் இதில் முனைப்பு காட்டுகின்றனர்.

இந்த மாதம் புதுடெல்கியில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவை பிரகாஸ் கரத் சந்தித்துப் பேசினார். இலங்கைத் தீவின் அமைதி முயற்சிகளுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று மங்கள சமரவீரவை பிரகாஸ் கரத் வலியுறுத்தினார்.

ஐக்கிய இலங்கை எனும் கட்டமைப்புக்குள் கூட்டாட்சி முறையில் உரிய அதிகாரப் பகிர்வின் மூலம் அமைதி வழித்தீர்வு காணவேண்டும் என்றும் மங்கள சமரவீரவிடம் பிரகாஸ் கரத் கூறியுள்ளார்.

அவரை ஜனாதிபதி மகிந்தவும் சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்தியாவில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் அமைந்த பின்னர் 2004 ஆம் ஆண்டில் சீத்தாரம் யெச்சூரி இலங்கை சென்றிருந்தார். இந்திய அரசாங்கம் என்ன செய்கிறதோ அதற்கு அனுசரணையாளராக செயற்படுவதுதான் தமது கட்சி என்று அவர் தெரிவித்துள்ளார்.

"இலங்கைப் பிரச்சினையிலும் இந்திய அரசாங்கத்தினது நிலையைத்தான் நாம் கூறுகின்றோம்" என்றார் அவர்.

இலங்கைத் தலைவர்களுடனான செயற்பாடுகளில் சில தடைகள் இருக்கும் போதும் அவர்கள் கேட்டுக் கொண்டால் கண்டிப்பாக நாம் உதவுவோம் என்றும் அவர் கூறினார்.

இலங்கை அரசாங்கத்துடன்தான் மார்க்சிஸ்ட் தலைவர்கள் இதுவரை பேசியுள்ளனர். நேபாளத்தில் மாவோயிச போராளிகளைத் தொடர்பு கொண்டது போல், தமிழீழ விடுதலைப் புலிகளை இன்னமும் அவர்கள் தொடர்பு கொள்ளவில்லை.

பிரதேச அரசியலைப் பொறுத்தவரை அமெரிக்க எதிர்ப்புப் பார்வையுடன் மார்க்சிஸ்ட் கட்சி அணுகுகிறது.

அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அரசாங்கங்கள் அடிபணியக் கூடாது என்றும், அமெரிக்காவுக்கு எதிரான இடது சாரி சக்திகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் அந்தக் கட்சி விரும்புகிறது.

இதே அணுகுமுறையில் நேபாளம் மற்றும் இலங்கைப் பிரச்சினையை அந்தக் கட்சி பார்க்கிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் அமெரிக்காவின் ஆதரவு சக்தியாகவே நோர்வேயை மார்க்சிஸ்ட் கட்சி பார்க்கிறது. "நேபாளத்தைப் பொறுத்தவரையில் தொழிலாளர் இயக்கங்களை ஒருங்கிணைப்பதில் நாங்கள் பங்கு வகித்தோம்" என்றார் யெச்சூரி.

"அண்டை நாடுகளில் உள்ள பிரச்சினைகள் எம்மை பாதிக்கிறது. பங்களாதேஷில் பிரச்சினை ஏற்பட்ட போது அகதிகளாக வந்தனர். நேபாளத்திலும் அதே நிலைமைதான். இலங்கைப் பிரச்சினையானது - தமிழ் நாட்டை பாதிக்கும். ஆனால், நாம் இந்த நாடுகளின் இறைமை மற்றும் சுதந்திரம் ஆகியவற்றை மதிக்கிறோம்" என்றும் யெச்சூரி கூறினார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு ஐ.நா.அமைதிப்படை வருவது தவிர்க்க முடியாததாகும்

## என்கிறது ஐ.தே.கட்சி

கொழும்பு —

இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் அமைதிப் படை வருவது தவிர்க்க இயலாதது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.கவின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனரத்ன ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது -

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகவும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மதிப்பதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். ஆகையால், மகிந்த சிந்தனையை விட ரணில் சிந்தனையே ஏற்கத்தக்கது.

வன்முறைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதால் அமைதி முயற்சிகள் சீர்குலைந்தால், இலங்கைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப்படை வருவது தவிர்க்க இயலாததாகி விடும்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் - அமைதி முயற்சிகளைத் தீவிரமாக முன்னெடுக்காது போனால் ஐ.நா.அமைதிப்படை வரும்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீவிர உறுப்பு நாடுகள் இலங்கைக்கு அமைதிப்படையை அனுப்பவேண்டிய சூழ்நிலையை வலியுறுத்தி வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையானது முடிவெடுத்து விட்டால் இலங்கை அரசாங்கத்தால் அதைத் தடுக்க முடியாது. ஐ.நா.வுக்கு வேறு மாற்று வழியில்லை.

ஆனால், ஐ.நா. அமைதிப்படையின் முயற்சிகள் தோல்வியடையுமானால் இந்த நாடு பிளவுபட்டு வடக்கு - கிழக்கு தனியரசாக மாறிவிடும். 21 நாடுகளில் இத்தகைய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

ஐ.நா அமைதிப்படையை ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய அறியாமையால் எதிர்க்கின்றன. இலங்கையைச் சேர்ந்த எவராலுமே ஐ.நா. அமைதிப் படையை அனுப்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால், தடுத்து விட முடியாது.

அனைத்துக் கட்சிக்கூட்டத்தில் அமைதி வழித் தீர்வுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு கூட்டம் முடிந்த பின்னர் போர் முரசு அறைகின்ற கட்சிகள் இவை.

இந்தக் கட்சிகள் வெளிநாட்டு ஊடகங்களை விமர்சிப்பதற்கு எதுவுமே காரணமில்லை. பொதுமக்கள் படுகொலை செய்யப்படுகிற நிலையில்தான் பி.பி.சி. போன்ற ஊடகங்கள் செய்திகளை வெளியிட நேருகிறது எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# மனித உரிமைகள் (?)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் எந்தளவு உச்சக் கட்டத்தில் இருக்கின்றதென்பதற்கு உதாரணமாக - மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அதிகாரிக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலைக் குறிப்பிடலாம்.

அல்லைப்பிட்டிப் படுகொலைகள் தொடர்பாக் விசாரணை நடத்தியதன் பின்னர்தான் இந்தக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அல்லைப்பிட்டி மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டுசெல்லக் கூடாது என்றும், அப்படிக் கொண்டு சென்றால் கொல்லப்படுவாய் என்றும் தொலைபேசி மற்றும் எழுத்து மூலம் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி–கூடவே எச்சரிக்கை கடிதத்துடன் துப்பாக்கி ரவையும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏதோ தமிழ் சினிமாவில் வரும் காட்சிகள் போலவே இருக்கிறது.

இந்தக் கொலை அச்சுறுத்தல் சாதாரணமான விடயமல்ல. ஏனெனில் இந்த கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட விதமும், அதற்கான காரணமும் இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சூழலை தெளிவாகப் புடம்போட்டுக் காட்டக்கூடியது.

யாழ்.குடாநாட்டில் இப்போது தமிழ் மக்களின் மனித உரிமைகள் என்பது கரிசனை கொள்ளப்படும் ஒன்றாகவே கருதப்படுவதில்லை. நினைத்த நேரத்தில்–நினைத்த இடத்தில் எவரையும் சுட்டுக் கொலை செய்யலாம்.

இதைத் தட்டிக்கேட்க யாருமே இல்லை என்ற நிலைதான் காணப்படுகிறது. அதுபோலத்தான் இராணுவக் கெடுபிடிகள், கைது செய்யப்படுவது, காணாமற்போவது என்று எதையுமே எவரும் தட்டிக்கேட்க முடியாத அளவுக்கு குடாநாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.

ஏதோ பெயருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ், நீதிமன்றம் என்று சம்பிரதாயபூர்வமான நடவடிக்கைகளைத் தவிர - உருப்படியான காரியம் ஏதும் நடப்பதாகத் தெரியவில்லை.

அவசர காலச்சட்டம் படைத்தரப்புக்கு கொடுத்திருக்கும் வரையறையற்ற அதிகாரம் நாட்டில் சட்டம், நீதி எல்லாவற்றையும் செல்லாக் காசாக்கி விட்டிருக்கின்றது.

அதுவும் தமிழரென்றால் கேட்டுக்கேள்வி இன்றி எவரையும் கொல்லலாம் என்ற நிலைதான் காணப்படுகிறது. ஏதோ மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டால் நீதி கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்த மக்களுக்கு - இந்தக் கொலை அச்சுறுத்தல் அவர்களுக்கும் இதே கதியா என்ற கேள்வியை எழுப்ப வைத்துள்ளது.

அல்லைப்பிட்டி படுகொலைகள் குறித்து விசாரணை நடத்துவது - அங்கிருந்து இடம்பெயரும் மக்களை பாதுகாப்பான இடத்துக்கு அனுப்பி வைப்பது தவறு என்று கருதும் தரப்பு எது என்று குடாநாட்டு மக்கள் அனைவருமே அறிவர்.

இப்படி மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிக்கு அச்சுறுத்தல் விடுப்பதன் மூலம் அச்சுறுத்தலால் இடம்பெயரும் மக்களைத் தடுத்துவிடலாம் என்று யாராவது கருதினால் அது தவறானது.

மேலும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிக்கு அச்சுறுத்தல் விடும் அளவுக்கு–அதுவும் துப்பாக்கி ரவை அனுப்பி அச்சுறுத்தும் அளவுக்கு குடாநாட்டில் ஜனநாயகம், சட்டம், ஒழுங்கு(?) என்பன பேணப்படுகின்றன.

மனித உரிமை மீறல்கள் பற்றி வாய்கிழியக் கூறும் சர்வதேச சமூகம், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எல்லாம் இந்த மனித உரிமை மீறல்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை.


மனித உரிமைகள் ஆணைக்குழுவையே சுதந்திரமாகச் செயற்பட முடியாதளவுக்குச் செயற்படும் அரசும், அதன் கருவிகளும் எப்படி நாட்டு மக்களின் நிம்மதியான வாழ்வை உறுதிப்படுத்தப் போகின்றன?

குடாநாட்டில் உச்ச மட்டத்திலிருக்கும் மனித உரிமை மீறல்களை ஓரளவுக்காவது வெளிப்படுத்தும் களமாக இருந்த - மனித உரிமை ஆணைக்குழு இனிச் செயலிழந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அப்படியான சூழல் எழுந்தால் அதற்கு சர்வதேச சமூகமும் ஒரு காரணம். ஏனெனில் அவை ஆதரிக்கும் அரசு தானே இதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறது.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# கொழும்பில் பாரிய தாக்குதலை நடத்துவதற்கு புலிகள் திட்டமாம்!

## இராணுவ உளவுப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு

கொழும்பு நகரில் பாரிய தாக்குதலொன்றை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாகப் இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் கொழும்புத் தகவல் ஒன்றுதெரிவித்தது.

இதன்படி கொழும்பு நகரப் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகக் கொழும்பு நகரின் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதாகவும், வீதித்தடை, சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பெரும்பாலும் விடுதலைப் புலிகளின் இலக்காக பொருளாதார மத்திய நிலையம் இருக்கலாமெனவும் அவர தெரிவித்தார். இதே வேளை கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள உலக வர்த்தக மையக் கட்டடம் விடுதலைப் புலிகளின் பிரதான இலக்காக இருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் மீது தாக்குதலை மேற்கொள்ளவென குண்டுகள்க பொருத்தப்பட்ட மோட்டார் வாகனமொன்று கொழும்புக்கு வந்துள்ளதாகக் கடந்த புதன்கிழமை புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# அமெரிக்க அதிகாரிகளை தாக்கிய ஐ.தே.க.பிரமுகர்

கொழும்பு

கொழும்பில் அமெரிக்கத் தூர்தரக அதிகாரிகளை ஐக்கிய தேசியக் கட்சி யின் மேல் மாகாண சபை உறுப்பினர் துமிந்த சில்வா தாக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு டிரெண்டி இரவு விடுதியில் கடந்த வெள்ளிக் கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளதாக கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த விடுதியில் கண்ணாடிகளை உடைத்து நொருக்கிய ஐ.தே. க.பிரமுகர், அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த பெண் உட்பட வெளிநாட்டு விருந்தினர்களைத் தாக்கியுள்ளார்.

பாலியல் வல்லுறவு வழக்கு ஒன்றில் தற்போது பிணையில் உள்ளவர் துமிந்த சில்வா.

இதற்கு முன்னர் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் அவரது ஆதரவாளர்களின் தாக்குதலுக்கு இந்த விடுதி உள்ளாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பிரச்சினை குறித்து

# இந்திய அதிகாரிகள் தமிழக அரசுக்கு விளக்கம்

கொழும்பு

இலங்கை தொடர்பாக இந்திய அரசாங்கம் கடைப்பிடித்து வரும் கொள்கையை தமிழ் நாட்டில் புதிதாக பதவியேற்றிருக்கும் தி.மு.க.தலைமையிலான அரசாங்கத்துக்குத் தெரிவிப்பதற்காக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.நாராயணசாமியும் றோ புலனாய்வு அமைப்பின் தலைவரும் அடுத்துவரும் வாரங்களில் தமிழகத்துக்கு வரவுள்ளனர்.

இவர்கள் இருவரும் தமது பயணத்தின் போது முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்து இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினைகள் தொடர்பாகத் தமிழக அரசு எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது குறித்து ஆலோசனை வழங்கவுள்ளனர்.

# சர்வகட்சி மாநாட்டிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி விலகும்?

கொழும்பு

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக் கொண்டு, கட்சியைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபட்டால் உடனடியாக செயற்படும் வகையில், சர்வகட்சி மாநாட்டிலிருந்து விலகிக் கொள்வதற்கும் அரசினால் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளுக்கு வழாங்கும் ஆதரவை இடைநிறுத்துவதற்கும் ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

ஐ.தே.கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு, அரசின் செயற்பாடுகள் தொடர்பாக நடத்திய கலந்துரையாடலின் பின்னர் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாக அந்தக் கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னர் அரசாங்கம் ஐ.தே.கட்சியின் சிரேஸ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்முடன் இணைத்த போதும், தேசியப் பொறுப்பு எனும் விடயத்தை கவனத்திலெடுத்து ஐ.தே.கட்சி சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்றதாகவும், அதற்கமைய, சர்வகட்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கைக்குக்கூட ஐ.தே.கட்சி உடன்பட்டதாகவும், ரணில் விக்கிரமசிங்க இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார்.

அதுபோன்ற நிலைமையில் அரசாங்கம் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது மக்களது உயர் செல்வாக்கை கவனத்திலெடுக்காது செயற்பட்டது குறித்து ஐ.தே.கட்சி நம்புவதனால் தொடர்ந்தும் தாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசுடன் இணைத்துக் கொண்டு, ஐ.தே.கட்சியின் உறுதியைக் குலைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டால் இந்த தீர்மானத்துக்கு வர வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

ரணிலின் இந்த முடிவை ஏற்றுள்ள பிரதித் தலைவர் கருஜெயசூர்ய உட்பட சிரேஷ்ட உறுப்பினர்கள் அரசின் எதிர்காலச் செயற்திட்டத்துக்கமைய இறுதித் தீர்மானத்தை ஒன்றிணைந்து எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியின் இந்தத் தீர்மானம் குறித்து இந்தியா உட்பட இலங்கைக்கு உதவி வழாங்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் தெரிவிப்பதற்கு ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது. (தே)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இறுதிப்போருக்கு உரம் சேர்க்குமாறு படைப்பாளிகளுக்கு புதுவை அழைப்பு!

கிளிநொச்சி—

தமிழீழ விடுதலைக்கான இறுதிப் போருக்கு உரம் சேர்க்கும் மன எழுச்சியை உருவாக்க முன்வருமாறு படைப்பாளிகளுக்கு விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழக நடுவப்பணியகத்தில் படைப்பாளிகளுடனான ஒன்று கூடல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதுவை இரத்தினதுரை பேசியதாவது -

தமிழ் மக்கள் இன்று நெருக்கடியான சூழலுக்குள் வாழ்கின்றனர். இராணுவப் பகுதிகளில் மக்கள் நாளாந்தம் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கம் போரைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறது. இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசின் கொடுமைகள் அதிகமான சூழலில் சமாதானத்தை உண்மை முகத்தை மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் யாவரும் போருக்குத் தயாராக இருக்கிறார்கள்.

அவர்கள் அங்கு படையினரிடம் அகப்பட்டுள்ளார்களே தவிர அவர்களுக்குஅடிமைகளாக தாம் இல்லை என்பதை உணர்த்தும் வகையில் போரை தமது கைகளில் எடுத்திருக்கிறார்கள். இதேவேளை தமது பகுதிகளில் மக்கள்முழுமையாகப் போராட்டத் துக்குத் தயாராகிறார்கள் .

ஒட்டு மொத்தமாக எழுச்சி பெற்றுள்ள எமது மக்களுக்கு மன எழுச்சியை ஏற்படுத்த வேண்டும். நம்பிக்



கையை வலுப்படுத்த வேண்டும். இந்த எழுச்சி நமது இறுதிப்போருக்கு உரம் சேர்க்கும். அதனைப் படைப்பாளிகள் செய்ய வேண்டும் என புதுவை இரத்தினதுரை வேண்டுகோள் விடுத்தார். கிளிநொச்சியிலுள்ள படைப்பாளிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# தமிழ்நாட்டுக்கரை என்று கூறி இலுப்பைக்கடவையில் தரையிறக்கம்

## படகுக்காரரர்கள் மோசடி

மன்னார்—

மன்னாரிலிருந்த தமிழ்நாட்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்த 15 குடும்பங்கள் மன்னார் இலுப்பைக் கடவையில் இறக்கி விடப்பட்டுள்ளனர்.

தமிழகத்துக்கு கொண்டு சென்று விடுவதாக தெரிவித்து 15 குடும்பங்களிடம் ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபா பணத்தை வாங்கிய படகுக்காரர்கள் பேசாலையிலிருந்து நேற்றுமுன்தினம் இரவு 11மணிக்கு புறப்பட்டு இராமேஸ்வரம் எனத் தெரிவித்து மன்னார் இலப்பைக்கடவையில் இறக்கி விடப்பட்டுளளனர்.

15 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேர் இலுப்பைக்கடவையில் தற்போது உள்ளனர். மோசடிப் படகுக்காரரை அடையாளம் காட்டத் தயாராக இருப்பதாகவும் அந்த மக்கள் தெரிவித்தனர்.

# 4 புதிய மிக்-27 விமானங்கள் விமானப்படை கொள்வனவு

கொழும்பு—

முப்படைகளையும் பலப்படுத்தும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஒரு நட்வடிக்கையாக-விமானப் படைக்கென புதிதாக நான்கு மிக்- 27 ஜெட் போர் விமானங்கள் வாங்கப்படவுள்ளன.

2000 ஆம் ஆண்டில் உக்ரேனிடம் இருந்து இலங்கை விமானப் படை மிக் - 27 ஜெட் போர் விமானங்களை வாங்கியிருந்தது.

இவற்றுள்ஒன்று விபத்திலும் மற்றொன்று கட்டுநாயக்க விமானத் தளம் மீதான தாக்குதலின் போதும் விமானப்படையால் இழக்கப்பட்டன.

அதேவேளை விமானப்படையிடம் உள்ள நான்கு மிக் - 27 விமானங்கள் மறுசீரமைப்புக்காக விரைவில் உக்ரேனுக்கு அனுப்பிவைக்கப் படவுள்ளன.

இவற்றின் செயற்பாட்டுக் காலம் முடிந்ததாலேயே உக்ரேனுக்கு அனுப்பப்படவுள்ளன.

தற்போது நிலவும் சூழலில் விமானப்படையின் ஜெட் ஸ்குவாட்ரன் பலமற்று இருப்பதாகவும் இதனால் உக்ரேனிடம் நான்கு புதிய மிக் - 27 ஜெட் விமானங்களை வாங்க விமானப்படை திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பான பூர்வாங்க வேலைகளில் விமானப்படைத் தலைமையகம் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 18 வாகனங்கள் தடுத்துவைப்பு!

யாழ்ப்பாணம்—

முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து ரி.என்.ரி வெடிபொருள் ஏற்றிவந்ததாகக் கூறி நேற்றுமாலை 18 வாகனங்களை படையினர் தடுத்து வைத்திருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று மாலை 4 மணியளவில் முகமாலையூடாக யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த வாகனங்களை சோதனையிட்ட படையினர் அவற்றில் சிறியளவிலான வெடிபொருட்கள் இருந்ததாகக் கூறி தடுத்து வைத்திருந்தனர்.

வாகனங்களில் வந்த பயணிகளை மாலையில் விடுவித்த அதே வேளை சாரதிகளையும் 18 வாகனங்களையும் மேலதிக விசாரணைக்காக தடுத்து வைத்திருப்பதுடன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# கிளைமோர் மீட்பு!

கொழும்பு—

மொனறாகல, புகுணுகல றஜ மகா விகாரைக்கருகே வெள்ளவாய பிரதான வீதியில் நேற்றுக்காலை கிளைமோர் குண்டொன்று மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 7 மணியளவில் இந்தக் கிளைமோர் குண்டு கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸார் நிறுத்தப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் அது பாதுகாப்பாக அகற்றப் பட்டது.

## கடத்தப்பட்ட....

பட்டுள்ளார்.

மாதவராசாவின் சடலம் நேற்று காலை 8 மணிக்கு மூதூரில் கண்டெடுக்கப்பட்டது.

மூதூர் இறங்குதுறையில் நேற்று மாதவராசா வெள்ளைவானில் கடத்தப்பட்டபோது அவருடன் நின்றிருந்த மனைவி, தனது கணவர் கடத்தப்பட்டதை அங்கிருந்த படையினரிடம் தெரிவித்தார். ஆனால் அதுபற்றி தமக்குத் தெரியாது என்று அவர்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் மாதவராசா படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இது பற்றி போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டபோது கருணா குழுவே செய்தது என்று படையினர் தெரிவித்துள்ளனர்.

## வில்பத்தில் ...

லங்களும் நேற்று மீட்கப்பட்டதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

## அமெரிக்க...

இதன்பின்னர் இலங்கை வரும் றிச்சர்ட் பௌச்சர் அரசாங்க உயர் மட்டத் தலைவர்களை சந்தித்து பேச்சு நடத்துவார்.

## தாயகத்தின்...

உரிமைக்குரல்கள் ஓங்கிட - உலகம் யாவும் திரும்பிட - தடைகள் யாவும் உடைந்திட - தமிழர் தாழ்வு திறந்திட - புலம்பெயர் வாழ் தமிழர்களே! உங்கள் நாட்டு உரிமைக்குரலுக்கான ஒன்று கூடலில் இணையுங்கள்.

ஒருமித்த குரலுடன் சர்வதேசத்தின் மனச்சாட்சியின் முன் நம் நியாயங்களை முன்வைக்க ஒன்று கூடுங்கள்.

இதுவே, நாம் பங்கேற்கும் இறுதிப் போராய், பேரணியாய், இனி விடுதலைப் பேரணியாய், புனித விதை குழிகளில் விதைக்கப்பட்ட நம் புனித உறவுகளின் கனவுகளை வென்றெடுக்கின்ற களமாய் ஒன்று கூடுவோம் என ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

ஒத்துமாறல்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவன் கொழும்பு அல்லது பெரதெனியா பல்கலைக்கழக கலைப்பீடத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு :-
T.P. - 0776184704 (2286)

# திருமலையில் சிவில் நிர்வாகத்தை இராணுவ நிர்வாகமாக்கச் சதி!



## எழிலன் குற்றச்சாட்டு

திருகோணமலை—

திருகோணமலைக்கு இராணுவ அதிகாரியொருவரை அரச அதிபராக அரசு நியமித்திருப்பது குடிசார் நிர்வாகங்களை இராணுவ நிர்வாகமாக மாற்றும் சதி என்று திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தலைவரிடம் எழிலன் இதனைத் தெரிவித்தார்.

திருகோணமலையின் அரச அதிபராக இராணுவத்தின் முன்னாள் அதிகாரியான மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா என்பவரை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

ஏற்கனவே வடக்கு - கிழக்கு மாகாணசபை ஆளுநராக கடற்படை அதிகாரியாக இருந்த ரியர் அட்மிரல் மொகான் ஜயவிக்கிரம என்பவரை அண்மையில் மகிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

இவர்கள் தமிழர் தாயகத்தில் தமிழ்மக்கள் மீதான கொடூரப் போரை நடத்தியவர்கள் ஆவர். இலங்கை அரசு திட்டமிட்டு தமிழர் தாயகப் பகுதிகளில் குடிசார் நிர்வாகங்களை கட்டுப்படுத்தும் நிலையிலுள்ள உயர் நிலையினராக- படையதிகாரிகளுக்கு ஓய்வு கொடுத்து உடனடியாகவே இந்தப் பதவிகளை வழங்கி வருகிறது.

இது தொடர்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் மாவட்டத் தலைவருடன் தொடர்பு கொண்ட எழிலன் தமிழ் மக்களைத் திட்டமிட்டு குடிசார் நிர்வாகங்கள் வழியாகவும் ஒடுக்குவதற்காக இந்த இராணுவ மயப்படுத்தலைச் செய்து வருவதாக தெரிவித்துள்ளார்.

படையினர் பல வழிகளிலும் போர் நிறுத்தத்தை மீறி தமிழ் மக்களைப் படுகொலை செய்கின்ற அதே வேளை - குடிசார் நிர்வாகத்தையும், இராணுவமயப்படுத்துகின்றமையையும் கண்காணிப்புக்குழு கவனத்திலெடுக்க வேண்டும் என்றும் எழிலன் கேட்டுள்ளார்.

இராணுவ அதிகாரி அரச அதிபராக நியமிக்கப்பட்டதைக் கண்டித்து திருகோணமலை பொது அமைப்புக்கள் அறிக்கைகளை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளன.

# தனக்கு எதிரான ஆவணங்களை மூடி மறைக்கும் மேஜர் ஜெனரல்!

## சண்டே ஒப்சேவர் தகவல்

கொழும்பு—

இராணுவத் தளபதி இராணுவத் தலைமையகத்தில் இல்லாத தற்போதைய சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி சிரேஷ்ட மேஜர் ஜெனரல் அதிகாரியொருவர் தனக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆவணங்களை மறைத்து வருவதாக சண்டே ஒப்சேவர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

குறிப்பிட்ட மேஜர் ஜெனரல் தனது மனைவி நடத்தி வந்த தனியார் பாதுகாப்பு சேவையில் இராணுவத்தினரைப் பணியில் ஈடுபடுத்தியது தொடர்பான குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

இந்த தனியார் பாதுகாப்பு சேவையில் பணியாற்றிய ஜெயவிக்கிரம என்ற சிப்பாய் திடீரென காணாமற் போனதையடுத்து அவரது தந்தையார் உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

இதன் பின்னர் பொலிஸார் ஜெயவிக்கிரமவை கிராமப் புறம் ஒன்றிலிருந்து தப்பியோடிய சிப்பாய் எனக் கூறி கைதுசெய்திருந்தனர்.

குறிப்பிட்ட மேஜர் ஜெனரல் அப்போது இந்தியாவில் தேசிய பாதுகாப்புக் கல்லூரிக்குச் சென்றிருந்தார். இந்த நிலையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது அந்த மேஜர் ஜெனரல் தனது பாதுகாப்புக்காக இருந்த ஒரு அதிகாரி மற்றும் 12 படையினரை மனைவியின் தனியார் பாதுகாப்பு சேவையில் இணைத்திருந்தமை தெரியவந்தது.

நாவலவில் இருந்த இந்தப் பாதுகாப்பு சேவை தொடர்பாகவும் இராணுவப் பொலிஸ் விசேட விசாரணைக்குழு பூரண விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பித்திருந்தது. இதன்போது இரண்டு சாரதிகளுக்குப் பதிலாக ஐந்து சாரதிகளை வைத்திருந்ததும் ஒரு சமையலாளுக்குப் பதிலாக இரண்டு சமையல் ஆட்கள் வைத்திருந்ததும் தெரியவந்தது.

தான் இந்தியா சென்றபோது தனது தனிப்பட்ட அதிகாரிகளை தனியார் பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்தி வந்ததும் தனது மனைவிக்கு இராணுவ சிப்பாய் ஒருவரை தனிப்பட்ட பாதுகாப்புக்காக நியமித்திருந்ததும் விசாரணைகளின்போதுதெரியவந்தது.

இராணுவச் சிப்பாயான ஜெயவிக்கிரம தான் தனியார் பாதுகாப்புச் சேவையிலுள்ள பூந்தொட்டிகளுக்குத் தண்ணீர் ஊற்றுமாறு பணிக்கப் பட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

அதேவேளை - தனியார் பாதுகாப்பு நிலையத்திலுள்ள கணினி ஒன்று உடைந்ததற்கு அங்கிருந்த சார்ஜன்ட் ஜெயதிலக பண்டாரவே காரணமென்று மேஜர் ஜெனரல் அவரைக் கடுமையாகத் தாக்கினார் என்றும் தெரியவந்துள்ளது.

இராணுவ சட்டம் மற்றும் பொதுச் சொத்துக்கள் சட்டம் ஆகியவற்றை மீறும் விதத்தில் மேஜர் ஜெனரல் நடந்து கொண்டதை நிரூபிக்கும் ஆவணங்களையே அவர் தற்போது மறைத்து வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. மிகவும் திட்டமிட்ட வகையில் அவர் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாகவும் உயர் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி சண்டே ஒப்சேவர் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை - குறிப்பிட்ட மேஜர் ஜெனரலின் பெயரை அப்பத்திரிகை வெளியிடாத போதும் இராணுவத் தளபதிக்கு அடுத்த நிலையிலுள்ள மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சியையே சுட்டிக் காட்டியிருக்கலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

REERDO
பெற்றோர்களே!
உங்கள் பிள்ளைகளைத் தினந்தோறும் பாடசாலைக்கு அனுப்பிவையுங்கள்
“கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான்”
Unicef
பெற்றோர்களே சிந்தியுங்கள்!
குளப்பிட்டி வீதி, உயரப்புலம், ஆனைக்கோட்டை,
REERDO
[C/5359]

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 29.05.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.